DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : STC 13/2020

List of Witness : Lw1

Prosecution Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | தங்கராஜ் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | பிச்சைமுத்து | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 09/06/2026

(எதிரி ஆஜர் )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் இடும்பகுடும்பன்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 6,7 வருடங்களுக்கு முன்பு நங்காஞ்சி ஆற்று பாலத்தில் சண்டை நடந்து கொண்டு இருந்தது. அங்கு கூட்டமாக இருந்தது. என்ன என்று நான் பார்க்க சென்றேன். போன இடத்தில் நான் வழுக்கி விழுந்து எனது தலையில் அடிப்பட்டு ரத்தக்காயம் ஏற்பட்டுவிட்டது. வேறு எதுவும் நடைபெறவில்லை. ஆஜர் எதிரி எனது அக்காவின் மகன் ஆவார். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 22.05.2019 ஆம் தேதி மாலை 5.30 மணியளவில் நான் எனது வீட்டு அருகே உள்ள நங்காஞ்சி ஆற்று பாலத்தில் நின்று கொண்டிருந்தபோது மேற்டி ஜெயபிரகாஷ் என்னிடம் வந்து ஏண்டா கொத்தா, தாயோலி மகனே ஏண்டா எங்கிட்ட பிரச்சனை பண்ணுற என்று அசிங்கமாக பேசி சண்டை போட்டார் எனவும், அதற்கு நீ என்னடா எனக்கு சொல்றது எனக்கூறி என்னை கீழே தள்ளிவிட்டார் என்றும், நான் விழுந்த சமயம் அங்கு அருகில் இருந்த கம்பை எடுத்து அடித்துவிட்டார் என்றும்,

அதில் எனக்கு தலையில் வலதுபுறம் ரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், பின்னர் எனது வீட்டருகே நின்று பார்த்துக்கொண்டிருந்த எனது அண்ணன் அழகர்சாமி எனது மனைவி தனலட்சுமி இருவரும் தடுக்க வந்தார்கள் என்றும், மேற்படி ஜெயபிரகாஷ் என்னை பார்த்து என்கிட்ட பிரச்சனை செய்தால் உன்னை அடித்து கொன்றுபுதைத்து விடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்து ஓடிவிட்டார்கள் என்றும், காயம்பட்ட என்னை எனது மனைவி ஆம்புலன்ஸில் ஏற்றி ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார் என்றும், இது சம்பந்தமாக நான் அம்பிளிக்கை காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு எதிரி எனது அக்காவின் மகன் என்பதாலும், தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டதாலும் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் உள்ள புகார்தாரர் என்னும் இடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **சமாதான மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இல்லை.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.06.09 18:46:17 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 09/06/2026